# EpiPen® மற்றும் EpiPen Jr® ஆட்டோ-இன்ஜெக்டர்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்.

கேரியர் டியூபில் இருந்து EpiPen® ஆட்டோ-இன்ஜெக்டரை அகற்றி, பின்வரும் 2 எளிய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

## 1. வானத்திற்கு நீலம்.



- செம்மஞ்சள் நுனி கீழ் இருக்கும்படி பிடிக்கவும்
- **நீல நிறப் பாதுகாப்பு மூடியை நேரே இழுக்கவும் – வளைக்கவோ அல்லது திருகவோ வேண்டாம்**

## 2. தொடைக்கு செம்மஞ்சள்.



- செம்மஞ்சள் நுனியை வெளித் தொடையின் நடுப்பகுதியின் மேலாக வைக்கவும்
- **“க்ளிக் ஒலி” கேட்கும் வரை ஆட்டோ-இன்ஜெக்டரை உந்தலுடன் அழுத்தி தொடையில் உட்செலுத்தவும்**
- அந்த இடத்தில் முழுமையாக 3 வினாடிகளுக்குப் பிடித்திருக்கவும்

EPIPEN®
(Epinephrine) Auto-Injectors 0.3/0.15mg
Trusted for over 25 years.

**EpiPen® ஐ- பயன்படுத்திய பிறகு நீங்கள் உடனடியாக மருத்துவக் கவனிப்பை நாட வேண்டும் அல்லது அவசரகாலநிலைச் சிகிச்சை அறைக்குச் செல்ல வேண்டும். அடுத்த 48 மணிநேரங்களுக்கு, நீங்கள் ஒரு உடல்நலப் பராமரிப்பு மையத்திற்கு அருகாமையில் அல்லது 911 என்ற எண்ணை அழைக்கக்கூடிய இடத்தில் தங்கியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.**

# தகவல்களை அறிந்திருக்கவும். தயாராக இருக்கவும்.



## நுகர்வோர் இணையத்தளமான EpiPen.ca -ஐ பார்வையிடவும்

- உங்கள் EpiPen® ஆட்டோ-இன்ஜெக்டரை எப்போது மற்றும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி அறிந்துகொள்ளவும்
- **இலவச** EpiPen® இடுப்புப்பொதிகள், பயிற்சி கருவித் தொகுப்புகள் மற்றும் மேலும் பலவற்றை ஆர்டர் செய்யுங்கள்
- **இலவச** EpiPen® காலாவதி நினைவூட்டல்கள் மற்றும் செய்திக்கடிதங்களைப் பெறுவதற்குப் பதிவு செய்துகொள்ளுங்கள்
- EpiPen® வீடியோ காட்சியகத்தையும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் பார்வையிடுங்கள்

## கூடுதல் வளஆதாரங்கள்

- Food Allergy Canada: **foodallergycanada.ca**
- Allergy, Asthma & Immunology Society of Ontario: **allergyasthma.on.ca**
- Allergies Québec: **allergies-alimentaires.org**
- The Association of Allergists and Immunologists of Québec: **allerg.qc.ca**

EpiPen® மற்றும் EpiPen Jr® (எப்பிநெப்பிரின்) ஆட்டோ-இன்ஜெக்டர்கள் என்பவை, கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (அனாபைலேக்சிஸ்) வரலாற்றைக் கொண்ட தனிநபர்கள் உள்பட, கடும் ஒவ்வாமைக்கான (அனாபைலாக்டிக்) அதிகரித்த ஆபத்தைக் கொண்டவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்ட நோயாளிகளின் கடும் ஒவ்வாமை எதிர்வினைகளுக்கெதிரான அவசரகாலச் சிகிச்சைக்கானவையாக இருக்கின்றன. பொருத்தமான வேளைமருந்தின் சக்தியைத் தேர்ந்தெடுப்பது, நோயாளியின் உடல் எடைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகிறது.

EpiPen® மற்றும் EpiPen Jr® ஆட்டோ-இன்ஜெக்டர்கள் ஆகியவை அவசரகால உதவிச் சிகிச்சைக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டவையாகும். இவை பின்நிகழ்கின்ற மருத்துவ அல்லது மருத்துவமனைப் பராமரிப்புக்கான ஒரு மாற்று அல்ல. மருந்து செலுத்தப்பட்ட பிறகு, நோயாளிகள் உடனடியாக மருத்துவக் கவனிப்பை நாட வேண்டும் அல்லது அவசரகாலச் சிகிச்சை அறைக்குச் செல்ல வேண்டும். அடுத்த 48 மணிநேரங்களுக்கு, நோயாளிகள் ஒரு உடல்நலப் பராமரிப்பு மையத்திற்கு அருகாமையில் அல்லது 911 என்ற எண்ணை அழைக்க இயலும் இடத்தில் தங்கியிருக்க வேண்டியது கட்டாயமாகும். இத்தயாரிப்புப் பொருள் உங்களுக்குச் சரியானது தானா என்பதை உறுதிசெய்வதற்கு, எப்பொழுதும் லேபிளைப் படித்துப் பார்த்து, அதில் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். எச்சரிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள், பக்க விளைவுகள் மற்றும் கொடுக்கப்படவேண்டிய முழுமையான அளவு மற்றும் உட்செலுத்தும் அறிவுறுத்தல்களுக்குத் தயவுசெய்து நுகர்வோர் தகவல் கையேட்டைப் பார்க்கவும்.

இந்த குறிப்பாதார அட்டை, PAAB ஆமோதித்த APS -இல் இருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டதாகும்.

© 2020 Pfizer Canada ULC, Kirkland, Quebec H9J 2M5 • **இலவச தொலைபேசி இலக்கம்**: 1-877-EPIPEN1 (1-877-374-7361)
EpiPen®, EpiPen Jr® ஆகியவை Mylan, Inc. நிறுவனத்தால் பதிவுசெய்யப்பட்ட வணிகச்சின்னங்களாகும். இந்நிறுவனத்திற்கு முழு உரிமையான துணை நிறுவனமான Mylan Specialty, L.P.; துணை-உரிமம் பெற்ற Pfizer Canada ULC, Kirkland, Quebec H9J 2M5 ஆகியவற்றுக்குப் பிரத்யேகமாக உரிமம் வழங்கியுள்ளது.

Pfizer PAAB MEMBER OF INNOVATIVE MEDICINES CANADA

PP-EPI-CAN-0261-TA

EPIPEN® (Epinephrine) Auto-Injectors 0.3/0.15mg

Trusted for over 25 years.